## யாழ். வலயக் கல்வித் திணைக்களத்தின் அனுசரணையுடன்
## தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்
## Field Work Centre
## தவணைப் பரீட்சை, நவம்பர் - 2015
## Term Examination, November - 2015

FWC

| தரம் :- 13 (2016) | தமிழ் - II | மூன்று மணித்தியாலங்கள் |
|---|---|---|

❖ **பகுதி I இல் மூன்று வினாக்களுக்கும் பகுதி II இல் உள்ளவற்றுள் 'அ' பிரிவிலிருந்து ஒரு வினாவுக்கும் 'ஆ' பிரிவிலிருந்து ஒரு வினாவுக்கும் எல்லாமாக ஐந்து வினாக்களுக்கு விடை தருக.**

### பகுதி - I

01) அ) எல்லா வினாக்களுக்கும் விடை தருக.

ஒவ்வொரு கூற்றுக்கும் கீழே ஐந்து விடைகள் தரப்பட்டுள்ளன. அவற்றுள் மிகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.

1) மூக்கொலி இடம்பெறும் சொல்
1. பச்சை 2. சங்கு 3. செய்தி
4. பல்துறை 5. தோல்வி

2) உயிர் தொடர்க் குற்றியலுகரமாக அமைவது
1. ஐந்து 2. தூது 3. அன்பு 4. புரியாது 5. யாது

3) தற்காலத் தமிழில் சொல்லின் இறுதியில் இடம்பெறாத எழுத்துக்களின் தொகுதி
1. எ, ஒ, ஓ 2. எ, ஏ, ஔ 3. ஈ, எ, ஒ
4. ஈ, உ, ஊ 5. எ, ஒ, ஔ

4) உடனிலை மெய்ம்மயக்கம் இடம்பெறும் சொல்
1. தண்ணீர் 2. நன்றி 3. கல்வி
4. தாய்மை 5. பார்வை

5) கண்டாள் என்பதன் அடிச்சொல்
1. கண் 2. காண் 3. கண்டு 4. காட்சி 5. கண்ட

6) நேற்று வந்தவள் என் தோழி என்பதில் வந்தவள் என்பது
1. வினைச்சொல் 2. தொழிற்பெயர்
3. வினையாலணையும் பெயர் 4. எச்சவினை
5. முற்றுவினை

7) மாணவர்க்கு உரியது நல்லொழுக்கம் என்பதில் 'கு' உணர்த்தும் பொருள்
1. கொடை 2. பகை 3. நட்பு 4. முறை 5. தகுதி

8) இன்று பரீட்சைப் பெறுபேறுகள் வெளிவருமோ என்பதில் வந்துள்ள 'ஓ' கார இடைச்சொல் தரும் பொருள்
1. வினா 2. தெரிநிலை 3. மிகை
4. ஐயம் 4. எதிர்மறை

9) மழை பெய்யின் நிலம் நனையும் என்பது
1. காரியப் பொருள் 2. எச்சப் பொருள்
3. நிபந்தனைப் பொருள் 4. கருவிப் பொருள்
5. கருத்தாப் பொருள்

10) திருவாசகம் ஓதினான் என்பதில் வந்துள்ள ஆகுபெயர்
1. சொல்லாகு பெயர்
2) கருவியாகு பெயர்
3. கருத்தாவாகு பெயர்
4) காரியவாகு பெயர்
5. பொருளாகு பெயர்

11) உடம்படுமெய் தோன்றிப் புணர்ந்த சொல்
1. சொல்லை
2. பொருளை
3. அவற்றை
4. பூவை
5. மரத்தை

12) உயிர்முன் உயிர் புணர்தலுக்கு உதாரணமாக அமைவது
1. பூவிதழ்
2. கடற்கரை
3. கலைக்கூடம்
4. தீராப்பசி
5. கட்டுச்சேலை

13) சேரனும் சோழனும் பாண்டியனும் தமிழ்நாட்டை ஆண்டனர் என்பதில் வந்துள்ள 'உம்' இடைச்சொல் தரும் பொருள்
1. ஐயம்
2. எண்
3. எதிர்மறை
4. முற்று
5. ஆக்கம்

14) மற்றொன்று என்பது
1. இடைச் சொற்றொடர்
2. வினையெச்சத் தொடர்
3. பெயரெச்சத் தொடர்
4. எழுவாய்த் தொடர்
5. விளித் தொடர்

15) பின்வருவனவற்றுள் 'இ'கரம் வேறுபட்டு ஒலிக்கும் சொல்
1. இளமை
2. இவர்
3. நிலம்
4. இலை
5. திசை

16) காரண இடுகுறிப் பெயராக அமையும் சொல்
1. பறவை
2. கடல்
3. சோறு
4. பொன்னன்
5. முள்ளி

17) 'நான் தந்தியடித்தேன்' என்பதில் தந்தியடி என்பது
1. ஏவல்வினை
2. துணைவினை
3. கூட்டுவினை
4. காரணவினை
5. பிறவினை

18) ஆக்கப் பெயர் விகுதிகள்
1. இயல் சாலி
2. இய இயர்
3. கு டு
4. மின் மார்
5. அன் ஆன்

19) கிரேக்க மொழிச் சொல்லாக இடம்பெறுவது
1. அட்டவணை
2. அத்தர்
3) துப்பாக்கி
4. சுருங்கை
5. அட்டிகை

20) மனித வாழ்வில் இன்பமும் துன்பமும் வருவதுண்டு என்பதைக் குறிக்கும் பழமொழி
1. வல்லான் பம்பரம் மணலிலும் ஆடும்
2. ஆனைக்கொரு காலம் பூனைக்கொரு காலம்
3. இலையும் பழுப்பும் எங்குமுண்டு
4. எடுப்பது பிச்சை ஏறுவது பல்லக்கு
5. இட்டுக்கெட்டார் எங்குமில்லை.

(20 x 1 = 20 புள்ளிகள்)

ஆ) பின்வரும் ஐந்து வினாக்களுக்கும் சுருக்கமான விடை தருக.

1) இடைநிலை மெய்ம்மயக்கத்தின் இரு வகைகளையும் உதாரணந் தந்து விளக்குக.
2) தனிவினை, கூட்டுவினை என்பவற்றைத் தெளிவுபடுத்துக.
3) வினாச்சொற்கள், வினா இடைச்சொற்கள் என்பவற்றை உதாரணந் தந்து விளக்குக.
4) 'ஏ' கார இடைச்சொல் எவ்வெப் பொருள்களில் வரும் என்பதை உதாரணங்களுடன் விளக்குக.
5) உவமைத்தொகை, பண்புத்தொகை ஆகியவற்றை உதாரணந் தந்து விளக்குக.

(5 x 2 = 10 புள்ளிகள்)

02) அ) பின்வரும் உரைப்பகுதியின் சாராம்சத்தை 50 சொற்களில் சுருக்கி எழுதுக.

பதினெட்டாம் நூற்றாண்டில் வாழ்ந்த உரைநடையாசிரியர்களுள் சிவஞானசுவாமிகள் ஒப்புயர்வற்று விளங்கியது போலவே, பத்தொன்பதாம் நூற்றாண்டில் ஆறுமுகநாவலர் சிறப்புற்று விளங்கினார். தமிழ்மொழி வளர்ச்சிக்கு உரைநடை விருத்தி அவசியமென்று வற்புறுத்தியவர்களுள் ஆறுமுகநாவலரும் ஒருவர். கிறிஸ்தவ மதப் பிரசாரத்தினால் பத்தொன்பதாம் நூற்றாண்டில் சைவசமயத்திற்குண்டான தளர்ச்சியை நீக்கிய நாவலர் பெருந்தகை தமிழ்மொழியை வளர்ப்பதற்குப் பல முயற்சிகளைச் செய்துள்ளார். சென்னையிலே அச்சியந்திரசாலை ஒன்றை அமைத்துப் பல தமிழ் நூல்களைத் திருந்திய முறையில் பிழையறப் பதிப்பித்து உதவினார். எடுத்துக் கொண்ட காரியம் எதனையும் சோர்வின்றித் திருத்தமாகச் செய்யும் இயல்பினர் நாவலர் என்பதற்கு வழுக்கள் யாதுமின்றி அவர் அச்சிட்ட நூல்களே சான்றாகும்.

செய்யுள் இலக்கியங்கள் வேண்டிய அளவு தமிழில் இருப்பதால் அவற்றை இயற்றுவதிலும் உரைநடை நூல்களை இயற்றுவதே தமிழ்மொழியை வளர்ப்பதற்குச் சிறந்த வழி என்று கொண்டு, பெரியபுராணம், திருவிளையாடற் புராணம் முதலியவற்றை உரைநடையில் எழுதி உதவியதோடு அவர் பல கட்டுரைகளையும், கண்டன நூல்களையும் மாணவர் கற்பதற்கு வேண்டிய உரைநடை நூல்கள் பலவற்றையும் எழுதியுள்ளார். நாவலருடைய உரைநடை பழமையையும் புதுமையையும் ஒருங்கு தழுவிய, முற்போக்குடைய ஒரு சிறந்த நடையாகும். பழைய இலக்கண முறைகளை அனுசரித்து உரையாசிரியர்கள் எழுதிய நடையைப் போன்ற ஒரு கம்பீரமான நடையில் எழுதக்கூடிய ஆற்றலுடையவராயிருந்த போதும் தமிழறிவிற் குறைந்தோரும் எளிதில் பொருள் காணக்கூடிய வகையில் காலத்திற்கேற்றவாறு வழக்கிலுள்ள வழுவற்ற சொற்களைப் பிரயோகித்து ஒரு சிறந்த நடையினைக் கையாண்டு நூல்களை எழுதினார். அதனால் அவர் 'வசனநடை கைவந்த வல்லாளர்' என்று பாராட்டப்படுகின்றார். (10 புள்ளிகள்)

ஆ) பின்வரும் உரைப்பகுதியை வாசித்து அதன் கீழ்க் கொடுக்கப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை தருக.

1960 ஆம் ஆண்டை அடுத்து தமிழக நாவலைப் போலவே ஈழத்து நாவலிலும் சமுதாய விமர்சனப் பண்பு தலை தூக்கலாயிற்று. கதையம்சம் பின்தள்ளப்பட்டுச் சமூகப் பிரச்சினைகளின் இயங்கியலான வளர்ச்சியே நாவலுக்குப் பொருளாயிற்று. 50 ஆம் ஆண்டை அடுத்துத் தமிழிலக்கியத் துறையில் செல்வாக்குச் செலுத்தத் தொடங்கிய பொதுவுடமைச் சிந்தனையின் தர்க்க ரீதியான வளர்ச்சியாக இது அமைந்தது. 1965 ஆம் ஆண்டு இப்போக்கிற்கு வகைமாதிரியாக செ. கணேசலிங்கனின் 'நீண்ட பயணம்' நாவல் வெளிவந்தது. யாழ்ப்பாணத்தில் சாதிப் பிரச்சினை எரிமலை போல் வெடித்துக் குமுறிய காலச் சூழலே இதன் பகைப்புலம். இந்நாவலைத் தொடர்ந்து சடங்கு (1966) போர்க்காலம் (1969) ஆகிய சாதிப்பிரச்சினை நாவல்களையும் அரசியல், பொருளாதாரப் பிரச்சினைகளைப் பொருளாகக் கொண்ட செவ்வானம் (1969) தரையும் தாரகையும் (1968) மண்ணும் மக்களும் (1970) என்ற நாவல்களையும் எழுதி ஈழத்து நாவலுக்கு ஒரு புதிய கட்ட வளர்ச்சியையும் உயர் வாசக இரசனையையும் ஏற்படுத்தினார். தமிழகத்திலே பதிப்பிக்கப்பட்ட இந்நாவல்கள் தமிழ் எழுத்தாளர், திறனாய்வாளர் மத்தியில் ஈழத்து நாவல் துறைக்கு ஒரு கணிப்பைப் பெற்றுக் கொடுத்தது.

இன உணர்வு தலைதூக்கி நிற்கும் எல்லைப் புறமான திருகோணமலையைச் சார்ந்த தமிழ் இளைஞன் ஒருவன் தன் உணர்ச்சிகளுக்கும் சமூகப் பிரச்சினைகளுக்கும் இடையில் ஈடுகொடுத்து நிற்கும் மன வளர்ச்சியைப் பெறுவதைக் கலாபூர்வமாகச் சித்திரிப்பதாக க. அருள் சுப்பிரமணியத்தின் அவர்களுக்கு வயது வந்து விட்டது (1975) என்ற நாவல் அமைகின்றது. அரசியல், பொருளாதார அம்சங்களுக்கு முக்கியத்துவம் தந்து எழுதப் பட்டதாக சி. சுதந்திரராஜாவின் 'மழைக்குறி' (1975) என்ற நாவல் அமைகின்றது. தோட்டங்கள் தேசிய மயமாக்கப்பட்ட சூழ்நிலையில் சூழவுள்ள கிராம மக்களுக்கும் தோட்டத் தொழிலாளர்களுக்கும் இடையில் ஏற்பட்ட முரண்பாட்டைச் சித்திரிப்பதாக தி. ஞானசேகரனால் குருதிமலை (1979) எழுதப்பட்டது. இந்நாவலை ஒரு சமூக வரலாற்றுத் தகவல்களைத் தரும் ஆவணமாகக் கொள்ளலாம்.

i) இவ்வுரைப் பகுதியின் மையக் கருத்தை 15 சொற்களில் சுருக்கி எழுதுக.

ii) 'சமூகப் பிரச்சினைகளின் இயங்கியலான வளர்ச்சி, என்பதனால் கருதப்படுவது யாது?

iii) தமிழ் நாவல் வளர்ச்சி பற்றி இப்பகுதியில் குறிப்பிட்டவற்றைச் சுருக்கமாக விளக்குக.

iv) இங்கு குறிப்பிடப்பட்ட நாவல்களில் இடம்பெற்ற சமூகப் பிரச்சினைகள் எவை?

v) இவ்வுரைப் பகுதியில் கூறப்பட்டவற்றிற்குப் பொருத்தமற்ற கூற்றாக அமைவது எது?
   அ) நாவல்கள் சமூகப் பிரச்சினைகளுக்கு முக்கியத்துவம் கொடுத்தன.
   ஆ) உயர் வாசக இரசனையை ஏற்படுத்துவது மட்டுமே நாவலின் நோக்கமாக அமைய வேண்டும்.
   இ) சில நாவல்கள் வரலாற்று ஆவணங்களாகவும் அமைவதுண்டு

(5 x 2 = 10 புள்ளிகள்)

03) பின்வருவனவற்றுள் யாதேனும் ஒரு தலைப்பைத் தெரிந்து 300 - 350 சொற்கள் கொண்ட கட்டுரை வரைக.
   அ) இலங்கையில் மும்மொழிச் சமூகமொன்றைக் கட்டியெழுப்புதல்
   ஆ) மனித வாழ்வில் சமயத்தின் வகிபாகம்
   இ) இலக்கியமும் பண்பாடும்
   ஈ) ஊடக சுதந்திரம்
   உ) அறிவுடையார் எல்லாம் உடையார்

(20 புள்ளிகள்)

## பகுதி - II

### பிரிவு 'அ'

04) அ) சங்ககாலத்தில் தோன்றிய ஆற்றுப்படை இலக்கியங்களைக் குறிப்பிடுக.
   ஆ) அவற்றின் பண்புகளை விளக்குக.
   இ) சங்ககாலத்தில் அரசதுதி பாடும் மரபு பேணப்பட்டது என்பதற்கான சான்றுகளை விளக்குக.

(15 புள்ளிகள்)

05) அ) பல்லவர் கால பக்திசாரா இலக்கியங்களின் பண்புகளைத் துலக்குக.
   ஆ) பல்லவர் காலப் பக்தி இலக்கியங்கள் சோழப் பெருமன்னர் காலத்துக் காவியங்களில் எவ்வாறு செல்வாக்குச் செலுத்துகின்றன? (15 புள்ளிகள்)

06) அ) விஜய நகர நாயக்கர் காலத்தில் எழுந்த பொதுமக்கள் சார் இலக்கியங்களைக் குறிப்பிட்டு அவற்றின் பண்புகளை ஆராய்க.
   ஆ) 'விஜயநகர நாயக்கர் காலம் ஒரு பிரபந்த காலம்' என்பதற்கான காரணங்களை முன்வைக்குக. (15 புள்ளிகள்)

### பிரிவு 'ஆ'

07) அ) ஆரியச்சக்கரவர்த்திகள் காலத்தில் எழுந்த இலக்கியங்களை வகைப்படுத்துக.
   ஆ) "ஈழத்து இலக்கிய வரலாற்றில் ஆரியச்சக்கரவர்த்திகள் காலம் தலபுராண மரபின் உச்சக் காலமாகும்". அலசுக. (15 புள்ளிகள்)

08) அ) போர்த்துக்கேயர் கால இலக்கியப் பண்புகளையும் ஒல்லாந்தர் கால இலக்கிய பண்புகளையும் ஒப்பிட்டு ஆராய்க.
   ஆ) "போர்த்துக்கேய - ஒல்லாந்தர் காலப் பகுதியில் மதக் கருத்துக்களைப் பரப்புவதற்கே தமிழ் இலக்கிய வடிவங்கள் கையாளப்பட்டன. ஆராய்க. (15 புள்ளிகள்)